**செய்தி வெளியீடு எண்: 168** **நாள்: 27.02.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.2.2019) தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் கோயம்புத்தூர் மாநகர் – காந்திபுரத்தில் 10 கோடியே 90 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 128 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 44 கோடியே 76 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 339 காவலர் குடியிருப்புகள், காவல் நிலையம், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடம், தீயணைப்பு ஊர்தி நிறுத்துவதற்கான கட்டடம் மற்றும் திண்டுக்கல், காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 3 கோடியே 28 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, ‘‘உங்கள் சொந்த இல்லம்’’ திட்டத்தின் கீழ், விழுப்புரம் மற்றும் சேலத்தில் 26 கோடியே 25 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 113 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாநகரம் – காந்திபுரத்தில் 10 கோடியே 90 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 128 காவலர் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை – புதுப்பேட்டையில் 80 காவலர் குடியிருப்புகள், திருநெல்வேலி மாவட்டம் – மணிமுத்தாறில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் 9–ஆம் அணிக்காக 82 காவலர் குடியிருப்புகள் மற்றும் திருநெல்வேலி ஊரக ஆயுதப்படைக்காக 162 காவலர் குடியிருப்புகள், திருப்பூர் மாவட்டம் – குடிமங்கலத்தில் 15 காவலர் குடியிருப்புகள், என

41 கோடியே 13 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 339 காவலர் குடியிருப்புகள்;

சென்னை – மாதவரத்தில் 1 கோடியே 58 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாதவரம் பால் பண்ணை காவல் நிலையக் கட்டடம்; தருமபுரி மாவட்டம் – ஒகேனக்கலில் 67 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம்; காஞ்சிபுரம் மாவட்டம் – தாம்பரம், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்தில் 1 கோடியே 37 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வான்நோக்கி உயரும் 104 மீட்டர் நீளம் கொண்ட ஏணி ஊர்தியினை நிறுத்துவதற்கான கட்டடம்;

என மொத்தம், 55 கோடியே 67 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை ஊராட்சிமன்ற அலுவலக வளாகத்தில் 1 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவிலும், மதுரை மாவட்டம், மதுரை மீனாட்சியம்மன் கோயில் வளாகத்தில் 1 கோடியே 9 லட்சம் ரூபாய் செலவிலும், காஞ்சிபுரம் மாவட்டம் – மகேந்திரா வேல்டு சிட்டி வளாகத்தில் 1 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவிலும் அமைக்கப்பட்டுள்ள புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

‘‘உங்கள் சொந்த இல்லம்’’ திட்டத்தின் கீழ், சீருடை பணியாளர்களுக்காக விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கண்டம்பாக்கம் கிராமத்தில் கட்டப்படவுள்ள 53 வீடுகள் மற்றும் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் கிராமத்தில் கட்டப்படவுள்ள 60 வீடுகள், என மொத்தம் 26 கோடியே 25 லட்சம் 69 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 113 வீடுகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

குற்ற நிகழ்விடங்களுக்கு நேரில் சென்று குற்றவாளிகளின் ரேகைகளை சேகரித்து, காவல்துறை அலுவலர்களின் புலனாய்வுக்கு பெரிதும் உதவிகரமாக செயல்படக்கூடிய விரல் ரேகை பிரிவில் காலியாக உள்ள காவல் உதவி ஆய்வாளர் (விரல் ரேகை) பணியிடங்களுக்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 200 நபர்களுக்கு காவல் உதவி ஆய்வாளர் (விரல் ரேகை) பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் திரு.கே.பி. மகேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.ம. நா. மஞ்சுநாதா, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 27.2.2019**